தகவல் அறியும் உரிமைச் சட்டம் மேல் முறையீட்டு தீர்ப்பு • பாகப்பிரிவினை ஆவணம் - ஒரு சட்ட விளக்கம்

Rs.25/-

# லாயர்ஸ் லைன்

Vol: III - Issue: 29 - April : 2014 www.lawyersline.net



## சட்ட விதிகளை மீறி திருமணம்

வரம்பு மீறும் வாடகைத் தாய்கள்

மருத்துவமனைகள் உடந்தையா ?



## நசுக்கப்படும் நுகர்வோர் பாதுகாப்பு?



## சாலை விபத்துகளும் ! சட்டத் தேவைகளும் !



## பர்தா

முஸ்லீம் பெண்கள் முன்னேற்ற தடை ?

கூடிய ஜுவாலைகளைத் தருகின்றது. நெய் தீர்ந்துவிட்டால், அது தனக்குத் தாரணமான அக்கினி தத்துவத்தில் ஒன்றிவிடுகிறது. (அதாவது அணைந்து போகிறது).

அது போலத்தான் விஷயங்களிலும் செயல்களிலும் ஈடுபாடு கொண்ட மனம் பலவிதமான செயல்களை மேற்கொள்கின்றது. விஷயங்களிலிருந்து ஓய்ந்து விடுமானால் தனது தத்துவத்திலேயே லாபமடைகிறது.

கர்மேந்திரியங்கள் (செயற் புலன்கள்) ஐந்து, ஞானேந்திரியங்கள் (அறிவுப் புலன்கள் ஐந்து, அஹங்காரம் ஒன்று ஆக இந்த பதினொன்றும் மனத்தின் மாறுதல்கள் (விருத்திகள்). ஐந்து உடல் ஆக இந்தப் பதினொன்றும் மனோ விருத்திகளுக்கு ஆதாரமான பதினொரு விஷயங்கள் எனக் கூறுகின்றனர்.

மனம், உருவம், தொடு உணர்ச்சி, சுவை, ஒலி என்கிற ஐந்தும் அறிவுப் புலன்களின் விஷயங்கள். மலஜலம் கழித்தல், புணர்ச்சி (தாம்பத்திய உறவு) (சம்போகம்) ஓடியாடுதல், பேசுதல், கொடுத்தல் – வாங்குதல் என்ற செயல்கள் ஐந்தும் செயற்புலன்களின் விஷயங்கள். உடலை 'எனது' என்று சொந்தம் கொண்டாடுதல் அஹங்காரத் தின் விஷயம், ஆனால் சிலர், உடலெனும் படுக்கையில் படுத்துறங்கும் அஹங்காரத்தை (ஜீவனை) மனத்தின் பதினோராவது விஷயமாகவும், அந்த மனத்தை அண்டியுள்ள உடலைப் பன்னிரெண்டாவது விஷயமாக ஜடபரதர் கூறுகிறார்.

ஜடபரதர் சொன்ன மனம் சார்ந்த தத்துவத்தைதான் நாம் நம்முடைய நவீன காலத்திற்கு ஏற்றார் போல மனோதத்துவம் (Psycolology) அதாவது உளவியல் தொடர்பான (Psychiatrist) மன நோய்க்கு சிகிச்சை அளிப்பவர் என பாடமாக வைத்து படித்து வருகின்றோம்.

அதே மனதைத்தான நாம் குற்றவியல்(சட்டத்திற்கு உட்பட்டு) (Mense rea) குற்றமனம் என நவீன கல்வி கற்று வருகின்றோம். இருப்பதை மாற்றியமைப்பது புதுமையாகிறது. குற்றமனம் தொடர்பாக வழக்கு (Air 1996 SC1100) விவரிக்கிறது.

தொடரும்

# பாகப் பிரிவினை ஆவணம்

## (PARTITION DEED)





R.கிருஷ்ணமூர்த்தி
M.A(police administration). B.L

நம் மூதாதையர் சம்பாதித்த சொத்துக்களோ(அ) தாய், தந்தையர் சம்பாதித்த அசையும் மற்றும் அசையா சொத்துக்களை குடும்பத்தில் உள்ள அனைவரும் கூட்டாக சேர்ந்து ஆண்டு அனுபவித்து வரும் சமயத்தில், குடும்பத்தில் சிறிய, சிறிய பிரச்சினைகள் வரும பொழுது எங்களுக்கு உண்டான பாகத்தைப் பிரித்து கொடுத்து விடுங்கள். நாங்கள் நிம்மதியாக வாழ்கிறோம் என்று சொல்வதை பல குடும்பங்களில் நாம் பார்க்கலாம்.

இவ்வாறு பிரச்சினைகள் வரும்பொழுது முன்பெல்லாம் ஊர் பெரியவர்கள் (அ) பஞ்சாயத்துதாரர்கள் முன்னிலையில் குடும்பத்தில் உள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக் களை குடும்பத்தில் ஆண், பெண்களுக்கு சரிசமமாக பாகம் பிரித்துக் கொடுப்பார்கள்.அவர் அவர்களுக்கு உண்டான பாகத்தை அவர்அவர்கள் எந்தவித இடையூறும் இல்லாமல் சந்தோஷமாக அனுபவித்து வந்தார்கள்.

ஊர் பெரியவர்கள் முன்னிலையில் மூதாதையர் சம்பாதித்த சொத்துக்களை சரிசமமாக பாகம் பிரித்து கொடுத்தாலும், மற்றவர்கள் இன்னொருவருடைய பாகத்தில் போய் பிரச்சினைகள் செய்தார்கள். இவ்வாறு பிரச்சினைகள் வரும்போது எழுத்து மூலமாக இருந்தால் பேசுவதற்கும், கேட்பதற்கும் நன்றாக இருக்குமென்று Koorchit மூலமாக பாக பிரிவினை பத்திரங்களை எழுதிக்கொண்டு ஆண்டு அனுபவித்து வந்தார்கள். இதனால் பல பிரச்சினைகளை தவிர்க்கமுடிந்தது.

நாகரிகம் வளர, வளர மக்கள் போக்கும் மாறிக்கொண்டே வந்தது. அதனால் பல பிரச்சினைகளும் வந்தன. மக்கள் நியாமான முறையில் மூதாதையர்(அ) தாய், தந்தையர் சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்களை பிரச்னைகள் இல்லாமல் சரிசமமாக பிரித்துக்கொண்டு வாழவேண்டும் என்பதற்காக சட்டங்கள் இயற்றப்பட்டன. பதிவுத்துறை சட்டங்களில்,சொத்துக்களை பிரித்துக்கொண்டு ஆவணங்களை பதிவு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது.

பாகப்பிரிவினை ஆவணங்கள் எழுதும் போது குடும்பத்தில் உள்ள நபர்களுக்கு சேர வேண்டிய அசையும் (அ) அசையா சொத்துக்களின் விவரங்களையும், ஆண்,பெண்களுக்கு சேர வேண்டிய பாகத்தையும், குடும்பத்தில் உள்ள சிலரோ(அ) பலரோ அவர்களுக்கு உண்டான பாகத்தை மற்ற நபர்களுக்கு விட்டுக்கொடுத்து, அவர்களுக்கு உண்டான பாகத்திற்கு பணம் வாங்கி கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட விவரங்களை எல்லாம் பாகபிரிவினை ஆவணத்தில் தெளிவாக எழுத வேண்டும்.

குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒரே ஒரு பாகபிரிவினை ஆவணத்தில் பலருக்கும் சேர வேண்டிய பாகங்களையெல்லாம் எழுதும்பொழுது தெளிவாக எழுத வேண்டும். இவ்வாறு ஒரே ஒரு பாகபிரிவினை ஆவணம் எழுதும் பொழுது மற்றவர்கள் நகல் போட்டு எடுத்துக் கொள்ளலாம்.

நம் மூதாதையர் சம்பாதித்த (அ) தாய், தந்தையர் சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்கள் பிரிக்கும் பொழுது பிரச்சினைகள் வந்து விட்டால் நீதிமன்றத்தை அணுகி பாகபிரிவினை வழக்கு தொடுத்து. நமக்கு உண்டான சொத்தை நீதிமன்றம் மூலம் வாங்கி கொள்ளலாம்.